**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 59/2024**

**PW. 1**

**Date: 18.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பொற்செழியின் | வயது | 38 |
| கணவர்/தந்தை பெயர் | பாபு ராஜேந்திரகுமார் | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18$^{TH}$ April 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

20. நான் சொந்த பயன்பாட்டிற்காக தான் அந்த காரை வாங்கினோனா என்றால் ஆமார். எனக்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது. இதற்கு முன்பாக நான் என்ன கார் வைத்திருந்தேன் என்றால் Ford Endeavour வைத்திருந்தேன். போன் என்டோவர் காரை புதியதாக வாங்கினேனா என்றால் உபயோகபடுத்தபட்ட காரை வாங்கினேனா என்றால் உபயோகப்படுத்தப்பட்ட காரை தான் வாங்கினேன். தற்போது இந்த வழக்கிற்கு உட்பட்ட காரிற்கு நான் எப்போது முழுமையான பணத்தை செலுத்தினேன் என்றால் 01.06.2023 அன்று செலுத்தினேன்.

21. நான் மீண்டும் அந்த காரை விற்பதற்காக எதிரியிடம் ஒப்படைத்தேன் என்றால் ஆமாம். அந்த கார் விபத்தில் சேதமடைந்ததால் நான் எங்கு பழுது பார்த்தேன் என்றால் சென்னையில் உள்ள தனியார் மெக்கானிக்கிடம் பழுது பார்த்தேன். நான் வழக்கில் சொல்லியுள்ளது போன்று இருசக்கர வாகனத்தின் பதிவு எண் காருக்கு எதிரிகளால் கொடுக்கப்பட்டது தவறு என்றாலும், அந்த கார் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தது என்பதால் அந்த பதிவு எண்ணிற்கு பதிலாக வேறு பதிவு எண் தான் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

22. அவ்வாறு வேறு பதிவு எண் கொடுக்கபட்ட விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதற்காக நான் கையொப்பமும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் படித்து பார்க்காமல் தான் கையொப்பம் செய்தேன். நான் ஏற்கனவே ஒரு காரை வைத்திருந்ததால், அதை வாங்குவதற்காக வழிமுறைகள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், நான் இந்த காரை வாங்குவதற்கு அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் இட்டு தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் காரை நல்ல நிலையில் வாங்கி சென்றேன் என்றாலும், நான் விபத்தை ஏற்படுத்தி அதை சேதப்படுத்திவிட்டு, நானாக தன்னிச்சையாக சென்று தான் காரை விற்பனை செய்து தர எதிரிகளிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

23. என்னுடைய காரை உரிய விலைக்கு வாங்க யாரும் முன்வராததால் தான் எதிரிகளால் அதனை உடனடியாக விற்பனை செய்து கொடுக்க முடியவில்லை என்றாலும், அதற்குள் நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன்

என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் எதிரியிடம் அந்த காரை காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றாலும், எதிரிகளும் அந்த காரை உரிய ஆவணத்துடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றாலும் சரியல்ல.

24. எனவே, போலிசார் கார் மற்றும் ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றாலும், ஆனால் நான் கார் மற்றும் ஆவணங்களை வாங்க மறுத்துவிட்டதால், கார் காவல் நிலையத்தில் தற்போது வரரை உள்ளது என்றாலும், ஆவணங்களை போலிசார் பாதுகாப்பு கருதி எதிரிகளிடம் ஒப்படைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே, எதிரிகளுக்கு என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எவ்வித எண்ணமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சேர்ந்தோ, தனியாகவோ என்னை ஏமாற்றும் நோக்கத்தில் எவ்விதமான மோசடியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

25. நான் போலிசார் மூலமாக விபத்துக்குள்ளான காரை எதிரிகளை அச்சுறுத்தி அவரிடம் இருந்து பணம் பெற்றுவிடலாம் என முயற்சித்தேன் என்றால் சரியல்ல. நான் எப்போது அந்த காரை சரிபார்த்து விலைக்கு வாங்கினேனோ அப்போதே அந்த நடவடிக்கை முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் காரை வாங்கியபோது எதிரிகள் எனக்கு உத்தரவாதம் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக பழுது இருந்தால் சரி செய்வதாக சொன்னாக்ள். எதிரிகள் காரை விற்பனை செய்பவரிடம் இருந்து பெற்று, விரும்புவர்களுக்கு விற்று தரும் தொழில் தான் செய்து வருகிறார்கள்

என்றாலும், நான் காரை வாங்கியபோது அது சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்து தான் வாங்கி கொண்டேன் என்றாலும் சரியல்ல.

26. காவல் நிலையத்தில் உள்ள காரை நான் தான் காவல் நிலையத்தில் இருந்து பெற்றுகொள்ளாமல் இருந்து வருகிறேன் என்றாலும், அதை நான் எப்போது வேண்டுமானாலும் பெற்று கொள்ளலாம் என்றாலும், அந்த காரை நான் தான் வேண்டுமென்றே காவல் நிலையத்தில் இருந்து பெறாமல் உள்ளேன் என்றாலும், ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளார்கள் என்றாலும் எனக்கு அதில் விருப்பம் இல்லை. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் அந்த காரை, ஆவணத்தையும், காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்றாலும் எதிரிகள் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல.

27. நான் காரை ஆவணங்களை வைத்து'கொண்டு பணத்தை திரும்ப கொடுக்க வேண்டும் என்று எதிரிகளுக்கு வழக்கறிஞர்ஏதும் அனுப்பினேனா என்றால் இல்லை. எனவே நான் வழக்கிறகாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு குற்றவியல் வழக்கு இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,  திருப்போரூர்</u>**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 59/2024**

**PW. 2**

**Date: 18.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ரூபினி | வயது | 36 |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடேசன் | தொழில் | – |
| கிராமம் | | வட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18TH April 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

9. நான் புகார்தாரர் நிறுவனத்தில் என்ன பணி செய்கிறேன் என்றால் மேன் பவர் ஏஜென்டாக வேலை செய்கிறேன். எங்கள் நிறுவனம் எது சம்மந்தப்பட் நிறுவனம் என்றால் பெரிய நிறுவனங்களுக்கு பணி நிமித்தமாக ஆட்களை வேலைக்கு அனுப்பும் நிறுவனம் ஆகும். நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் புகார்தாரர் கார் வாங்கிய போது உடன் சென்றேனா என்றால் ஆமாம். எத்தனை முறை அவ்வாறு உடன் சென்றேன் என்றால் இரண்டு முறை சென்றேன்.

10. புகார்தாரர் எதிரிகள் நிறுவனத்தில் காரை வாங்கிய போது காரை வாங்கியது சம்மந்தமாக அவருக்கு முழு திருப்த்தி உள்ளதாக ஒரு வீடியோ பதிவு செய்த போது நானும் உடன் இருந்தேனா என்றால் ஆமாம். முழு பணமும் கொடுத்தான் புகார்தாரர் காரை வாங்கினார் என்றால் ஆமாம். எவ்வளவு நாள் கழித்து காரில் பழுது உள்ளது என்பது தெரிய வந்தது என்றால் ஒரு வாரம் கழித்து தெரிய வந்தது. அந்த காரில் பதிவு எண் இருந்ததா என்றால் இருந்ததது. அன்றைய தினமே எதிரிகள் காரின் ஆவணங்கள் அனைத்தையும் கொடுத்துவிட்டார்களா என்றால் இல்லை.

11. எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் ஆமாம். அது எத்தகைய நிறுவனம் என்றால் எங்கள் நிறுவனத்தின் பெயர் பி.ஜி.ஆர் ஏஜென்சி. வேறு நிறுவனங்களில் இருந்து படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்களை பணிக்கு அனுப்ப கேட்டார் நாங்கள் அது குறித்தத ஒப்பந்தம் செய்து ஆட்களை அனுப்புவோம். காரை வாங்கிய போது புகாத்தரரருடன் மெக்கானிக் மற்றும் வேறு இரு ஆட்கள் மட்டும் தான் சென்றுள்ளார்கள் என்றாலும், பெண்கள் யாரும் எதிரிகள் நிறுவனத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் வந்த மெக்கானிக் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் என்னுடைய நிறுவனத்தின் உரிமையாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்கள் அனைத்தும பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur